மாண்புமிகு திரு. ந. சுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் சிப்காட்டில் இடம் இருக்கிறது; அதிலே தகவல் தொழில்நுட்பவியல் பூங்கா அமைக்கப்படுமா என்று கேட்டிருக்கின்றார். தொழில் துறை அதற்கான இடம் வழங்கும்பட்சத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் பார்வைக்கு எடுத்துச் செல்லப்பட்டு, அது பரிசிலனை செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 305, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.எஸ். ரமணீதரன், மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

305—

பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கக் கட்டடம்

***61988—திரு. எஸ்.எஸ். ரமணீதரன்:**

மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அந்தியூர் தொகுதி, கூகலூர் பேரூராட்சி, தண்ணீர்பந்தல்புதூரிலுள்ள பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. பி.வி. ரமணா, பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலகத் தமிழர்களின் ஒப்பற்ற தலைவி, நிகழ்கால வளமைக்காகவும், எதிர்கால சந்ததியினர்களுக்காகவும் சிந்திக்கும் நமது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்களின் பொற்பாதம் வணங்கி வினாவிற்கான விடையை அளிக்க விழைகிறேன்.

அந்தியூர் தொகுதி, கூகலூர் பேரூராட்சி, தண்ணீர்பந்தல்புதூரில் உள்ள பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கத்திற்குச் சொந்தக்

கட்டடம் கட்டும் சாத்தியக்கூறுகள் தற்போது இல்லை என்பதைத் தங்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.எஸ். ரமணீதரன் அவர்கள்.*

திரு. எஸ்.எஸ். ரமணீதரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமப்புற மக்களின் வருவாயில் கால்நடைச் செல்வங்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன. கால்நடைத் துறைக்கு எண்ணற்ற திட்டங்களைத் தந்து, இரண்டாம் வெண்மைப் புரட்சியை உருவாக்கி, கிராமப்புற விவசாயிகளின் பொருளாதாரத்தை ஏற்றமுறச் செய்து, தமிழ்நாட்டு மக்களுக்கு மட்டுமல்லாமல், வாயில்லா ஜீவன்களான கால்நடைகளுக்கும் தாயாக விளங்கும் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் பாதம் பணிந்து வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது அந்தியூர் சட்டமன்றத் தொகுதி, கூகலூர் பேரூராட்சி, தண்ணீர்பந்தல்புதூர் பால் கூட்டுறவுச் சங்கமானது சிறிய வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகின்றது. இக்கூட்டுறவுச் சங்கத்திற்கு தினமும் சுமார் 350 லிட்டர் பால் வருகிறது. மேலும், கால்நடைத் தீவனம் மற்றும் இதரபொருட்களை வைக்க இட வசதியில்லாமல் மிகவும் கஷ்டப்படுகிற சூழ்நிலை உள்ளது. எனவே, இப்பகுதி மக்களின் நீண்ட நாள் கோரிக்கையான இந்தப் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கத்திற்குப் புதிய கட்டடம் கட்ட மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி.வி. ரமணா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூகலூர் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கத்திற்கு உட்பட்ட தண்ணீர்பந்தல்புதூர் கிராமத்தில் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கத்திற்குச் சொந்தமான அடிமனை நிலம் ஏதும் இல்லை. மேலும், சங்கத்திற்கு தானமாக இடம் கொடுக்க யாரும் முன்வராததாலும், மேற்படி சங்கத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட போதிய நிதி ஆதாரம் இல்லை என்பதாலும், சொந்தக் கட்டடம் கட்ட தற்போது*

சாத்தியக்கூறுகள் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 306, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. அன்பழகன், மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

306—

மாவட்ட முக்கிய சாலையைச் சீரமைத்தல்

***55335—திரு. க. அன்பழகன்:**

மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கும்பகோணம் தொகுதி, அன்னலக்ரகாரம்–கொருக்கை–மருதாநல்லூர் மாவட்ட முக்கிய சாலை எண் 832—ஐ அகலப்படுத்தி, சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களின் அனுமதியோடு திருத்திய விடையை அளிக்கிறேன்.*

கும்பகோணம் தொகுதி, அன்னலக்ரகாரம்–கொருக்கை–மருதாநல்லூர் மாவட்ட முக்கிய சாலை எண் 832—ல் காலமுறை புதுப்பிக்கும் பணியினை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அதை அகலப்படுத்தும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் தற்போது இல்லை என்பதைத் தங்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. க. அன்பழகன் அவர்கள்.*

முற்பகல் 10–35

திரு. க. அன்பழகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டம், கும்பகோணம் தொகுதி, மருதாநல்லூர், அன்னலக்ராரம், எம்.டி.ஆர். 832, சுமார் 5.2*